▲ திருநீர்மலை ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோயிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு திருத்தேரோட்டம் நடைபெற்றது. தேரை ஏராளமான மக்கள் வடம்பிடித்து இழுத்து சுவாமியை வணங்கினர்.

நித்தியக் கல்யாண பெருமாள் கோயிலில் திருத்தேர் உற்சவம்

■ மாமல்லபுரம்

திருவிடந்தை நித்தியக் கல்யாண பெருமாள் கோயிலில் சித்திரை மாத பிரம்மோற்சவத்தின் 7-ம் நாளான நேற்று திருத்தேர் உற்சவம் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அடுத்த திருவிடந்தையில் உள்ள நித்தியக் கல்யாண பெருமாள் கோயிலில் கடந்த 16-ம் தேதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்கியது. இவ்விழாவின் 7-ம் நாளான நேற்று திருத்தேர் உற்சவம் நடைபெற்றது. இதில், சிறப்பு மலர் அலங்காரத்தில் நித்தியக்கல்யாண பெருமாள் தேரின் மீது எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர், முக்கிய வீதிகளில் உலா நடைபெற்றது. இதில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் குமரன் தலைமையிலான பணியாளர்கள் செய்திருந்தனர்.

▲ உலக பூமி தினத்தையொட்டி சென்னை விமான நிலையத்தில், மண் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று, மண் பாதுகாப்பு குறித்து பயணிகளுக்கு விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்தனர்.

கதைகள் வழியாக மாணவர்களின் கல்வியை மேம்படுத்த

தொடக்கப் பள்ளியில் கதா மேஜிக் ஆய்வகம் தொடக்கம்

■ திருவள்ளூர்

கதைகள் வழியாக மாணவர்களின் கல்வியை மேம்படுத்த, பழவேற்காடு அருகே சுனங்குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கதா மேஜிக் ஆய்வகத்தை நேற்று திருவள்ளூர் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் திறந்து வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு அருகே உள்ளது சுனங்குப்பம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி. இப்பள்ளியில், கதைகள் வழியாக மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கதா தன்னார்வலர் தொண்டு நிறுவனம் சார்பில் கதா மேஜிக் ஆய்வகம் அமைக்கப் பட்டுள்ளது. இந்த ஆய்வகம், தமிழகத்தில் முதல் முறையாக தொடங்கப்பட்டுள்ள கதா மேஜிக் ஆய்வகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை நேற்று மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து பேசியதாவது:

கல்வி, மருத்துவம் ஆகிய இரு துறைகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்து, அத்துறைகளின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அரசு பல்வேறு முயற்சிகள் எடுத்தால் கூட தன்னார்வலர் நிறுவனங்களின் பங்களிப்பும் தேவைப் படுகிறது. அதில் ஒரு படியாகத் தான் கதா தன்னார்வலர் தொண்டு நிறுவனம் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, தொடக்கப் பள்ளி மாணவர்கள் எளிதில் புரிந்து கொண்டு கல்வி கற்பதற்கு ஏதுவாக இந்த கதா மேஜிக் ஆய்வகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சரியான முறையில் கல்வி

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி சரியான முறையில் கிடைத்தால் மட்டும்தான் அவர்கள் நடுநிலைப் பள்ளிக்கும், மேல்நிலைப் பள்ளிக்கும், மேற்படிப்புக்கும் போகும் போது சரியான முறையில் கல்வி கற்க முடியும்.

ஆகவே, கதைகள் சொல்லிக் கொடுத்து, கதைகள் வழியாக மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் சுனங்குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கதா மேஜிக் ஆய்வகம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வகத்தை பொது மக்கள் சரியான முறையில் பயன் படுத்தி, தங்களது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை அளிக்கும் பெற்றோராகத் திகழ வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தர்மராஜ், கதா தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் கீதா தர்மராஜன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆறுமுகம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

[illegible]

வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

● விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் குற்றச்சாட்டு

■ திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மீனா பிரியதர்ஷினி, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) எபினேசர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி, மீன்வளத் துறை மூலம் 5 மீனவ விவசாயிகளுக்கு ரூ.8 லட்சம் மதிப்பிலான விவசாய கடன் அட்டைகளை ஆட்சியர் வழங்கினார்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளில் பலர், திருவள்ளூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வியாபாரிகளின் கட்டுப் பாட்டில்தான் உள்ளன என குற்றம்சாட்டி அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

கரும்பு விவசாயிகள், 'திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மேம்படுத்த வேண்டும்' என்பது உள்ளிட்ட வாசகங்களுடன் கூடிய கோரிக்கை பதாகைகளை கையில் ஏந்தியிருந்தனர்.

சிலர் கொசஸ்தலையாறு, ஆரணியாறு வடிநில கோட்ட பாசனக் கால்வாய் மற்றும் போக்குக் கால்வாய்கள், ஏரிகள், குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், மாம்பாக்கத்தில் ஆரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.

திருவாலங்காடு அருகே உள்ள ஓரத்தூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்காமல், சின்னமண்டலி கிராமத்தில் அமைக்க முயற்சிகள் நடப்பதாக கூறி, 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள், ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

பின்னர், ஆட்சியர் விவசாயிகள் மத்தியில் பேசும்போது, "திருவள்ளூர் மாவட்டத்தில் நிரந்தர கான்கிரீட் திறந்தவெளி நெல் சேமிப்பு கிடங்கு அமைக்க தமிழக அரசு ரூ.43.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 75-வது சுதந்திர திருநாளை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 26-ம் தேதி, கிசான் மேளா வட்டார அளவில் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும், மாவட்ட அளவில், திரூர் வேளாண் அறிவியல் நிலையத்திலும் நடைபெற உள்ளது.

ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் வெங்கல், வெள்ளவேடு, பூச்சி அத்திப்பேடு, பட்டரைப்பெரும்புதூர், பொன்னேரி, பாதிரிவேடு, கவரப்பேட்டை, சின்னநாகபூண்டி ஆகிய 8 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பஞ்சாப் நேஷனல் பேங்க் punjab national bank

[illegible]

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)

[illegible] M/s. ASG [illegible] திரு.A.சேகர் (ஜாமீன்தாரர்) மற்றும் திரு.S. உதயகுமார் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) ஆகியோருக்கு 08.10.2014 [illegible] ரூ.75,67,445/- [illegible] 01.10.2014 [illegible] 21.04.2022 [illegible]

[illegible] ரூ.75,67,445/- [illegible] 01.10.2014 [illegible]

சொத்துக்களின் விவரங்கள்: [illegible]

தேதி : 21.04.2022 இடம் : சென்னை

அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி & முதன்மை மேலாளர் பஞ்சாப் நேஷனல் வங்கி

Indhu tamil Tisai / chennai - 23.04.22

ரயிலில் படிக்கட்டில் பயணித்த மாணவன் உயிரிழப்பு

■ பொன்னேரி

கும்மிடிப்பூண்டி அருகே பெரிய ஒபுளாபுரத்தைச் சேர்ந்த கைலார்மேடு பகுதியை சேர்ந்த கல்லுமுத்து மகன் ரித்திக்குமார்(17), கும்மிடிப்பூண்டியில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 படித்து வந்தார்.

இவர் பொன்னேரி-திருஆயர்பாடி கரிகிருஷ்ண பெருமாள் கோயில் தேர்த் திருவிழாவில் பங்கேற்பதற்காக கும்மிடிப்பூண்டியிலிருந்து, பொன்னேரிக்கு மின்சார ரயிலின் படிக்கட்டில் தொங்கியபடி பயணித்து வந்துள்ளார்.

ரயில் ஆரணி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தில் வந்தபோது, ரித்திக்குமார், பாலத்தை ஒட்டியுள்ள மின்கம்பத்தின் மீது மோதி, ரயிலில் இருந்து தவறி கீழே விழுந்துள்ளார்.

இதில், படுகாயமடைந்த ரித்திக்குமார் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். கொருக்குப்பேட்டை போலீஸார் விசாரிக்கின்றனர்.

'பேருந்து நிலைய நிழற்குடை மக்களுக்கு பயன்படுமா?'

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாநகராட்சி பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்கும்பணி தொடங்கியுள்ளது. வணிக நிறுவனங்களின் அருகே அமைக்கப்படும் இந்த நிழற்குடை மக்களுக்கு உண்மையில் பயன்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காஞ்சி நகராட்சியாக இருந்த போது பல சாலைகளில் நடைபாதை அமைக்கப்பட்டது. அந்த நடைபாதைகள் அனைத்தும் வணிக நிறுவனங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மக்கள் சாலையில்தான் இன்றளவும் நடந்து செல்கின்றனர். அந்த நடைபாதைகளை மீட்பதற்கோ, அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், பேருந்து நிலையத்தில் கடைகளை ஒட்டி நிழற்குடை அமைப்பதற்காக அடித்தளம் இடும்பணி தொடங்கியுள்ளது. சாதாரணமாக கடைகளின் அருகே மக்கள் நின்றாலே அங்குள்ள சிலர், "கடையை மறைத்துக் கொண்டு நிற்காமல், ஓரமாகப் போய் நில்லுங்கள் அல்லது எதிர் திசையில் போய் நில்லுங்கள்" என்று கடிந்துகொள்வது உண்டு. இந்தச் சூழ்நிலையில் கடைகளின் அருகே அமைக்கப்படும் நிழற்குடைகளை மக்கள் முறையாகப் பயன்படுத்த முடியுமா? என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே இடநெருக்கடியில் உள்ள அந்த பேருந்து நிலையத்தில் அவ்வப்போது அதிக பேருந்துகள் வந்தால் நெரிசல் ஏற்படும். இப்போதுநிழற்குடை அமைத்தால் நெரிசல் அதிகமாக வாய்ப்புள்ளது. இந்த நிழற்குடைகளும் ஆக்கிரமிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று சமூக ஆர்வலர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

நிழற்குடை அமைக்கப்பட்ட பிறகு அதை முறையாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். அந்த இடத்தை அருகில் உள்ள கடைகளைச் சேர்ந்தவர்கள் யாராவது ஆக்கிரமித்தால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

தலைமை ஆசிரியர் மீது ஊழல் புகார் கல்வி அலுவலகத்தில் சுவரொட்டி

■ கல்பாக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம் வாயலூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில், வாயலூர், ஆயப்பாக்கம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக கடந்த 2018-ம் ஆண்டுமுதல் ஹேமாவதி என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவர், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாகக் கூறி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர், சங்கத்தின் முன்னாள் பொருளாளர், ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர், மாவட்ட கல்வி அலுவலகத்தில் புகார் தெரிவித்தாக தெரிகிறது. ஆனால், புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மேற்கண்ட புகாரின் மீது மாவட்ட கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி, மாவட்ட கல்வி அலுவலக வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், புதுப்பட்டினம், வாயலூர் ஊராட்சி உட்பட பல்வேறு பகுதிகளில், வாயலூர் கிராம பெற்றோர், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இதுகுறித்து, செங்கை மாவட்ட கல்வி அலுவலர் ஒருவர் கூறும்போது, "வாயலூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மீதான புகார் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலருக்கு விசாரணை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

Intellect இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்
(CIN: L72900TN2011PLC080183)
பதிவு அலுவலகம் : 244, அண்ணா சாலை, சென்னை 600 006.
தலைமை அலுவலகம் : ப்ளாட் எண்.3/G-3, சிப்காட் IT பார்க், சிறுசேரி, சென்னை 600 130.
மின்னஞ்சல் : shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com
இணையதளம் : www.intellectdesign.com தொலைபேசி : 044-6700 8000 ஃபேக்ஸ் : 044-6700 8874

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

[illegible]

அதன் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	பங்குதாரரின் பெயர்	ஃபோலியோ எண்.	பங்குகளின் எண்ணிக்கை	தனித்துவமான எண்கள்	சான்றிதழ் எண்.
1	லக்ஷ்மி நாராயணன் இணை ஹோல்டர் - நாராயணன் கோபாலகிருஷ்ணன் G	00000740	150	225455 - 225604	740

[illegible] நிறுவனத்தின் இணையதளமான www.intellectdesign.com-லும் கிடைக்கப் பெறும்.

இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்-க்காக கையொப்பம்
இடம் : சென்னை V.V. நரேஷ்
தேதி : ஏப்ரல் 22, 2022 நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வொர்லி, மும்பை-400 018, மஹாராஷ்டிரா, இந்தியா. Tel:+91 22 66523500, Email id: customercare.mrhfl@mahfin.com, Website - www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: [illegible] சென்னை-600116

கோரிக்கை (Demand) அறிவிப்பு

2002-ம் ஆண்டு [illegible] 13(2) [illegible] 3(1)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு
[illegible] 13(12) [illegible] 13(2)-ன் [illegible] (Demand Notices) [illegible]

வ.எண்1: [illegible] XSEMTVR00990884, [illegible] 1. Mr.B.[illegible], 91, JJ நகர் [illegible] தமிழ்நாடு-602001 [illegible] 21.03.2022 [illegible] ₹4,78,472/- [illegible]
[illegible] 91, JJ நகர் [illegible] தமிழ்நாடு-602001 [illegible]

வ.எண்2: [illegible] XSEMTVR01058572, [illegible] 1. Mr.B.[illegible] பழைய எண்.217, புதிய எண்.287/3 [illegible] தமிழ்நாடு-602002 [illegible] 344 [illegible] தமிழ்நாடு-631203 [illegible] 21.03.2022 [illegible] ₹6,03,497/- [illegible]
[illegible] பழைய எண்.217, புதிய எண்.287/3 [illegible] தமிழ்நாடு-602002 [illegible]

வ.எண்3: [illegible] XSEMPOU00667208, [illegible] 1. Ms.G.[illegible] தமிழ்நாடு-600082 [illegible] 3. Ms.K.[illegible] 4. Mr.D.[illegible] 13/22 [illegible] தமிழ்நாடு-600082 [illegible] 31.03.2022 [illegible] ₹5,45,998/- [illegible]
[illegible] 90/5 D.D [illegible] தமிழ்நாடு-600082 [illegible]

வ.எண்4: [illegible] XSEMPOU01035722, [illegible] 1. Mr.R.[illegible] S.F.எண்.33/4, (33/4A,AB), 33/5 [illegible] தமிழ்நாடு-631209 [illegible] 226 [illegible] 2. Ms.R.[illegible] 226 [illegible] 12.01.2022 3. Mr.G.[illegible] 226 [illegible] ₹6,15,169/- [illegible]
[illegible] S.F.எண்.33/4, (33/4A,AB), 33/5 [illegible] தமிழ்நாடு-631209 [illegible]

வ.எண்5: [illegible] XSEMKAV01029487, [illegible] 1. Mr.[illegible] 202/7, புதிய எண்.202/209 [illegible] தமிழ்நாடு-631303 [illegible] 1/295 [illegible] 2. Mr.[illegible] 3. Ms.[illegible] 1/295 [illegible] RK [illegible] 4. Mr.V.[illegible] Na எண்.3/012 [illegible] 12.01.2022 [illegible] ₹7,48,135/- [illegible]
[illegible] 202/7, புதிய எண்.202/209 [illegible] தமிழ்நாடு-631303 [illegible]

வ.எண்6: [illegible] XSEMKRC01010800, [illegible] 1. Mr.K.[illegible] NA எண்.62 [illegible] தமிழ்நாடு-606205 [illegible] 1/20 [illegible] 2. Ms.E.[illegible] 1/20 [illegible] தமிழ்நாடு-606205 [illegible] 3. Mr.K.[illegible] NA எண்.62 [illegible] தமிழ்நாடு-606205 [illegible] 16.02.2022 [illegible] ₹6,77,934/- [illegible]
[illegible] NA எண்.62 [illegible] தமிழ்நாடு-606205 [illegible]

[illegible] 60 நாட்களுக்குள் [illegible] 24% p.m. [illegible] 13(4)-ன் கீழ் [illegible]

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி: 23.04.2022 (மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்)

நெடுஞ்சாலைத் துறையில் முறைகேடுகளைத் தடுக்க

உள்தணிக்கை செய்யும் புதிய நடைமுறை அமல்

■ சென்னை

முறைகேடுகளைத் தடுக்க நெடுஞ்சாலைத் துறையில் உள்தணிக்கை செய்யும் புதிய நடைமுறை செயல்படுத்தப்படவுள்ளது.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையில் சில சாலைப்பணிகள் முடிவடைவதற்கு முன்பே ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தத் தொகை வழங்கப்பட்டதாக சமீபத்தில் ஓர் இணையதள செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் 2 கோட்டப் பொறியாளர்கள் உட்பட 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து முழுமையான விசாரணை மேற்கொள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆர்.கோதண்டராமனை விசாரணை அலுவலராக நியமித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நிகழ்வு வேறு எங்கேனும் நடைபெற்றுள்ளதா என ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி உத்தர விடப்பட்டுள்ளது. இனி இதுபோன்ற முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்க உள்தணிக்கை என்ற புதிய நடைமுறை நெடுஞ்சாலைத் துறையில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி கண்காணிப்பு பொறியாளர் தலைமையிலான குழு ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் முதல் வாரத்தில் உள்தணிக்கை செய்து அறிக்கையை சென்னையில் உள்ள நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநருக்கு அனுப்ப உத்தரவிடப் பட்டுள்ளது என்றார்.

சென்னை, கடன் மீட்பு தீர்ப்பாயம்-I முன்னிலையில்,
O.A. எண். 241/2021
யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
அதன் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்
அண்ணா நகர் கிளை, AG-3, சாந்தி காலனி, பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை -600 040 ...விண்ணப்பதாரர்
எதிர்
1.M/s. Loyal Sanitation Pvt Ltd
அதன் பிரதிநிதியாக இயக்குநர்கள் திரு. B. இராம்குமார் - திருமதி. வதா இராம்குமார், 30, சுந்தர விநாயகர் கோயில் தெரு, 2வது பிரதான சாலை, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை - 600 106.
2.M/s. Swamy Enterprises
3.அதன் பிரதிநிதியாக இயக்குநர்கள் திரு. B. இராம்குமார் - திருமதி. வதா இராம்குமார், எண். 21/9, திருவீதியான் தெரு, வேது குறுக்கு கோபாலபுரம், சென்னை - 600 086.
4. திரு. B. இராம்குமார் M/s. Swamy Enterprises-இன் பங்குதாரர், எண். 21/9, திருவீதியான் தெரு, வேது குறுக்கு கோபாலபுரம், சென்னை -600 086
5. திருமதி. வதா ராம்குமார் M/s. Swamy Enterprises-இன் பங்குதாரர், எண். 21/9, திருவீதியான் தெரு, வேது குறுக்கு கோபாலபுரம், சென்னை - 600 086 ...பிரதிவாதிகள்
இந்த அறிவிப்பின் மூலம், சென்னை 600 006, ஜாபோஸ் சாலை, சாஸ்திரி பவன், கூடுதல் அலுவலகக் கட்டிடம், 7வது தளம், சென்னை, மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம்-I, அவர்கள் முன்னிலையில், நீங்கள் செலுத்தவேண்டிய கடன்பாக்கித் தொகை ரூ.1,71,68,781.09 (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஓர் இலட்சத்து அறுபத்து எட்டு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா ஒன்பது மட்டும்), வசூலிக்கும் பொருட்டு, தங்களுக்கு (பிரதிவாதிகள்) எதிராக, விண்ணப்பதாரர் அண்ணா நகர் கிளை, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா அசல் விண்ணப்ப எண்.241/2021 தாக்கல் செய்துள்ளார்கள். மேற்குறிப்பிட்ட விஷயமாக, 29/03/2022 அன்று கடன் மீட்பு தீர்ப்பாயம்-I, பதிவாளர் அவர்கள் விசாரித்து, அடுத்த விசாரணை 02/05/2022 அன்று ஒத்திவைத்துள்ளார்.
02/05/2022 அன்று நீங்கள், சென்னை-600 006, ஜாபோஸ் சாலை, சாஸ்திரி பவன், கூடுதல் அலுவலகக் கட்டிடம், 7வது தளம், சென்னை, மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம்-I, பதிவாளர், அவர்களின் முன்னிலையில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும், தவறினால் மனுவானது தாங்கள் இல்லாமலேயே விசாரித்து தீர்ப்பளிக்கப்படும்.
M/s. Dharma Sanjeevi & Nirmal Roy Sanjeevi
விண்ணப்பதாரர் வங்கியின் வழக்கறிஞர்கள்,
எண்.7, 2வது தளம், சுந்தேலிக் மையம்,
64, அர்மேனியன் தெரு, சென்னை -600 001.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி
பெயர்மாற்றம்

I, KAVITA Sadhuram Verma, W/O. Mahesh Kumar, R/O. FN F2, Blk 6, Sumeru City,IAF Rd, Selaiyur,Chn-73, have changed name to Kavita Verma vide afdvt dtd 21/04/22

ATTIPATTU ANITHA, wife of B.Prathap,born on 21st September 1974,residing at No:9/46,south reddy street,Athipet,Ambattur, chennai-600058.I have changed my name from Attipattu Anitha to P. Anitha.

ATTIPATTU PRATHAP Reddy ,son of Balaram,born on 30th January 1967,residing at No:9/46,south reddy street,Athipet,Ambattur, chennai-600058.I have changed my name from Attipattu Prathap Reddy to B. Prathap.

ஆட்கள் தேவை
நிறுவனம்

WANTED REWINDERS, Engineers & Office Clerks at Motor Workshop in Salem Contact- 9659415676

தொழில்
தொழில் சேவை

ALL BANK Auction properties are available at low cost You can buy Directly All over Tamilnadu Genuine Buyers contact 94441 33085

வீடு / நிலம்
இடம் விற்பனைக்கு

PREMIUM DTCP Plots Sale @Chengalpattu-(Vallam)Town Limit. Just 200Meters from 200Feet Road Ct:9176422122

வாடகை
அலுவலகம் வாடகைக்கு

COMMERCIAL 2K sqft & residence 1.4k sqft near nandhi statue west cit nagar for rent Contact: 9566020086

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).